# COVID-19 வைரஸுக்கு ஈடுகொடுப்பதற்கான கனடிய பதிலீட்டுத் திட்டம்

தற்பொழுது புதிய கொரோனா வைரஸ் அனைத்து உலக நாடுகளிலும் பரவியிருப்பதால், பொது சுகாதாரத் துறை ஊழியர்களும் மற்றும் பிராந்திய, மாணில பொது சுகாதாரத் துறை ஊழியர்களும் இந்த வைரஸ் பரவுவதைக் குறைப்பதற்கும் மற்றும் குறிப்பாக அதிகளவில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய – மற்றும் எமது சுகாதார முறைமையிலுள்ள எமது மக்களுக்கு அந்த வைரஸினால் ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைப்பதற்குமான ஒருங்கிணைந்த ஒரு அணுகுமுறையை உறுதிசெய்வதற்கு ஒன்றாக பாடுபட்டு வருகின்றார்கள்.

**எமது அவசர தயார்நிலை மற்றும் பதிலீட்டு நடவடிக்கைகளில் பின்வரும் வசதிகள் உள்ளடங்கியிருக்கும்:**

## ஆய்வுகூட வலையமைப்புகள்

COVID-19 தொடர்பாக தேசிய ரீதியில் மருத்துவப் பரிசோதனையை செய்துகொள்வதற்கான ஆற்றலை விருத்திசெய்து மேலும் மேம்படுத்தும் நிமித்தம் துரிதமாக வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் வசதி.

## விழிப்புணர்வு

இந்த வைரஸ் தொற்றிய நபர்களையும், அவர்களிடமிருந்து ஏனையவர்களுக்கு அது தொற்றும் வழிகளையும் இனங்கண்டு, சமூகத்தில் மற்றவர்களுக்கு பரவுவதை கண்காணித்துத் தடுத்தல். ஆகையால், துரித, இலக்கு நடவடிக்கைகளை பொது சுகாதார ஊழியர்களால் இலகுவாக மேற்கொள்ளலாம்.

## ஆராய்ச்சி

நோய் கண்டறியும் புதிய கருவிசாதனங்களையும், ஊசிமருந்துகளையும் மற்றும் சிகிச்சை முறைகளையும் கண்டுபிடித்து இந்த COVID-19 பற்றி நன்கறிந்துகொள்வதற்கான உலகலாவிய முயற்சிகளுக்கு பங்களித்தல்.

## பொது சுகாதார பரிகார நடவடிக்கைகள்

அந்த வைரஸ் நோயிலிருந்து தம்மையும் ஏனையவர்களையும் பாதுகாத்து அது பரவுவதைக் குறைப்பதற்கு சுகாதாரப் பராமரிப்புத் தொழில் நிபுணர்கள், தொழில்தருநர்கள், பாடசாலை நிருவாகிகள், பொதுமக்கள் ஆகியோரும் மற்றும் அனைவரும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஊக்குவித்தல் – உ+ம்: கைகளைக் கழுவிச் சுத்தமாக வைத்திருத்தல், இருமும் போது பாதுகாப்பான பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தல், தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொள்ளல் மற்றும் தொடுகையின்றிய தூரத்தில் தள்ளிநிற்றல்.

## சுகாதாரப் பராமரிப்பு ஆயத்தநிலைகள்

தேவையான போதெல்லாம் கனடா முழுதிலும் அறுவைசிகிச்சை முகமூடிகள், முகக்கவசங்கள், மருந்துகள் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு ஊழியர்கள் போன்ற வளங்களை ஆயத்தநிலையில் வைத்திருத்தல்.

## தொடர்பாடல் மற்றும் பொதுமக்களுக்கான தகவல் அறிவிப்பு

கனடிய மக்கள் தம்மையும், தமது குடும்பங்களையும், தமது மக்களையும் மற்றும் வியாபார நிலையங்களையும் பாதுகாத்துக்கொள்வதற்குத் தேவையான காலத்திற்கேற்ற, நம்பத்தகுந்த, அணுகக்கூடிய, சான்றுதிமிக்க, சரியான தகவல்களை வழங்குதல்.

## வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகளின் சுகாதார நலன்

நோய் தொற்றியிருக்கலாம் எனும் பயணிகளை அடையாளம் கண்டு அவர்கள் கனடாவுக்கு நுழையும் போது தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொள்ளல், வைரஸ் அறிகுறி பற்றிக் கண்காணித்துக்கொள்ளல் மற்றும் அவர்களுக்கு அத்தகைய அறிகுறிகள் தென்பட்டால் உரிய பரிகார நடவடிக்கையைப் பெற்றுக்கொள்ளல் முதலியன பற்றி அத்தகைய சகல பயணிகளுக்கும் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

## இந்த வரைஸ் பற்றிய மலேதகி தகவல்களக்கு:

1-833-784-4397 canada.ca/le-coronavirus

Agence de la santé publique du Canada
Public Health Agency of Canada
Canada